# கூடலூர் (கோ) நகராட்சி

2024-ஆம் ஆண்டு ஜுலை மாதம் (24.07.2024)-ஆம் தேதி புதன் கிழமை மாலை 04.45 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட பொருள்களின் தீர்மானங்கள் விவரம்.

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | நகர்மன்ற பெருள் வரிசை எண் மற்றும் பொருள் விவரம் | தீர்மானம் எண் / தீர்மான விவரம் |
|---|---|---|
| 24.07.2024 | **பொருள் எண்:01**<br>கூடலூர் நகராட்சிப்பகுதியில், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கூடலூர் நகரப்பகுதி சாலையோர வியாபாரிகளின் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015ன் கீழ், ஏற்கனவே, உள்ள நகர விற்பனைக்குழுவின் பிரதிநிதிகள் பதிவிக்காலம் நிறைவடைந்துவிட்டதால், மாண்புமிகு நகர்ப்புற உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்புகள் 2023ன் படி நகர்ப்பகுதிகளில் புதிதாக தெருவோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணிமேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு புதிதாக மின்னணு அடையாள அட்டை மற்றும் விற்பனைக்குழுசான்று வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் "Merifical" நிறுவனத்தின் மூலம் புதியதாக பயோமெட்ரிக் அடிப்படையில் சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணிமேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு மின்னணு அடையாள அட்டை மற்றும் விற்பனைக்குழுசான்று வழங்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021 UPA நாள்.07.06.2024ல் புதிதாக கணக்கெடுப்புகள் செய்யப்பட்ட சாலையோர வியாபாரத்தினை ஒழுங்கு படுத்துதல் திட்டம் மற்றும் விதிகள் 2015ன் கீழ் தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு நாள் 02.11.2015ல் கண்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு புதிதாக ஆறு விற்பனைக்குழு பிரதிநிதிகள் தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சி பகுதிகளில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட | தீர்மானம் எண்.645,<br>அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | சாலையோர வியாபாரிகள் மூலம் தேர்தல் நடத்திடவும், உறுப்பினர்கள் தேர்வு செய்யவும் மேற்படி தேர்தல் தொடர்பாக ஏற்படும் செலவு தொகை ரூ.3,00,000/- நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**:மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 385 /2022/எப்1) | |
| 24.07.2024 | **பொருள் எண்:02**<br>அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை. நாள்.18.07.2024-ல் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல்தளம் குடியிருப்பு கட்டடங்கள் கட்ட சுயசான்றின் அடிப்படையில் இணையவழி (Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு** :பதிவுசெய்யலாம்.<br>(ந.க.எண். 1801/2024/எப்1) | தீர்மானம் எண்.646,<br>அங்கீகரிக்கப்பட்டது. |

ஒம்/-அ.அறிவரசு
நகர்மன்ற தலைவர்,
கூடலூர்(கோ) நகராட்சி.

/ உண்மை நகல் /

26/7/24

ஆணையர்(கூ.பொ),
கூடலூர்(கோ) நகராட்சி.

26.7.2024